# கிராமின் கிருஷி மவுசம் சேவா

## இந்திய வானிலை துறை

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

## கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-10-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-11-01 | 2023-11-02 | 2023-11-03 | 2023-11-04 | 2023-11-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 12.0 | 30.0 | 15.0 | 10.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 28.0 | 28.0 | 28.0 | 29.0 | 29.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 23.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 88 | 88 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 78 | 78 | 78 | 76 | 76 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 6 | 6 | 5 | 5 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 28 முதல் 29 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலையானது 23-24 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 76 முதல் 90 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 05 முதல் 06 கிலோ மீட்டர் வேகத்தில் வடகிழக்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| நெற்பயிரில் அதிக அளவில் களைக்கொல்லி தெளிக்கப்பட்டதன் காரணமாக பயிரின் இலைகள் வெளுத்தும் பின்பு கருகியும் காணப்படுகிறது. நெற்பயிரில் ஏற்படும் இந்த பிரச்னையை நிவர்த்தி செய்ய பரிந்துரைக்கபட்ட அளவிற்கு அதிகமான களைக்கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தமிழ்நாட்டில் நவம்பர் 05 முதல் நவம்பர் 11 வரை மழை இயல்பைவிட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது பொழிந்த மழையின் காரணமாக முளைத்த தருவாயில் உள்ள நெற்பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் மற்றும் 25 கிலோ இரும்பு சல்பேட் (பெர்ரஸ் சல்பேட்) அல்லது 5 கிலோ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நுண்ணூட்ட கலவையை ஈரமான வயலில் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. விவசாயிகள் மானாவாரி நெல் சாகுபடியில் தேவையான அளவு மணிச்சத்தினை பெற ஒரு ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் அடியுரமாக இட வேண்டும். மேலும் முதல் மேலுரமாக பயிர் முளைத்த 20 முதல் 25 நாட்களில் மழை இல்லாத சமயங்களில் ஒரு ஏக்கருக்கு யூரியா @ 25 கிலோ மற்றும் பொட்டாஷ் @ 10 கிலோ இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. |
| நெல் | களை முளைப்பதற்கு முன் தெளிக்கக் கூடிய களை கொல்லிகளாகிய பிரிட்டிலாகுளோர் ஒரு எக்டருக்கு 1.5 லிட்டர் அல்லது பைரோசல்ப்யூரான் ஈதைல் களைக்கொல்லியை ஒரு எக்டருக்கு @ 200 கிராம் என்ற அளவில் மழை பெற்று மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் சரியான ஈரப்பதம் உள்ள சமயங்களில் தெளிக்க வேண்டும் அவ்வாறு தவரும் பட்சத்தில் களை முளைத்த பிறகு அடிக்கக்கூடிய களைக்கொல்லியான பிஸ்பைரிபாக்சோடியம் 10 சதம் எஸ். சி @ 200 மில்லி மருந்தை ஒரு எக்டருக்கு கைத்தெளிப்பானை பயன்படுத்தி தெளிப்பதன் மூலம் களைகளை கட்டுப்படுத்தலாம். |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | வறண்ட மற்றும் மேட்டுப்பாங்கான பகுதிகளில் நெற்பயிரில் கரையான் இளம்நாற்றுகளை கடித்து சேதப்படுத்துகிறது. இதனை கட்டுப்படுத்த வைக்கோலை சிறு சிறு துண்டுகளாக வெட்டி தண்ணீரில் நன்கு மூழ்கும்படி ஊறவைத்து பின்னர் ஒரு ஏக்கருக்கு வைக்கோலின் மீது குளோர்பைரிபாஸ் 1.5 சதத்தூளை 10 கிலோ தூவி மாலை நேரத்தில் வயலில் இடவேண்டும். |
| நெல் | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் நெற்பயிரில் இலைப்பேன் பரவலாக தென்படுகிறது. பூச்சி தாக்கப்பட்ட இலைகளின் நுனிசுருண்டு இறுதியில் வாடிவிடும்.இதனை கட்டுப்படுத்த தயாமீதாக்சம் என்ற நீரில் கரையக்கூடிய குருணை மருந்தினை ஏக்கருக்கு 40 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் நீருடன் கலந்து தெளிக்கலாம். |